# நம்முடைய சில
# பிரதான பலஹீனங்கள்

★

**அஜாய் கோஷ்**

(பொதுக் காரியதரிசி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)

★

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**

**தமிழ்நாடு கமிட்டி,**

**சென்னை-14.**

விலை 3 அணா

# பதிப்புரை

**1951** அக்டோபரில் கட்சி மகாநாட்டில் கட்சியின் திட்டம் வகுக்கப்பட்டதை அனைவரும் அறிவோம். அதன் பின் சென்ற ஒரு வருஷ கால அனுபவங்களைப் பரிசீலித்து, திட்டத்தை நிறைவேற்றுவதில், வெகுஜன இயக்கங்களை இணைத்துச் செல்வதில் என்னென்ன பலவீனங்கள் இடையூறுகளாக நிற்கின்றன என்பதைச் சமீபத்தில் டில்லியில் கூடிய மத்திய கமிட்டி விவாதித்தது. அதன் அடிப்படையில் பொதுக்காரியதரிசி தோழர் அஜாய்குமார் கோஷ் எழுதியது இக்கட்டுரை. "நிரந்தர சமாதானத்துக்காக, மக்கள் ஜனநாயகத்துக்காக"–எனும் (கோமின்பாரம்) பத்திரிகையின் 7-11-'52 இதழில் வெளியிடப்பட்டது.

கோமின்பாரம் பத்திரிகை தனது 1952 நவம்பர்மீ 21–ந்தேதி இதழில், விமர்சனம்—சுய விமர்சனத்தின் அவசியத்தை வற்புறுத்தும் தலையங்கத்தில், தோழர் அஜாயின் இந்த கட்டுரை பின்வருமாறு குறிப்பிடுகிறது :—

"தனது குறைபாடுகளைப் பற்றி கூர்மையான, கோட்பாடு ரீதியான விமர்சனத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செய்துள்ளது. 'நிரந்தர சமாதானத்திற்காக, மக்கள் ஜனநாயகத்திற்காக' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள 'நமது சில பிரதான பலஹீனங்கள்' என்ற கட்டுரையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுக் காரியதரிசி தோழர் அஜாய் கோஷ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல், ஸ்தாபன, தத்துவார்த்த வேலையில் எழுந்துள்ள குறைபாடுகளை உறுதியுடன் வெளிப்படுத்தியுள்ளார். 'எல்லா முனைகளிலும், எல்லா பிரதேசங்களிலும், எல்லா அரங்கங்களிலும் நமது முயற்சிகளும், நமது வேலையும் நூறு மடங்கு தீவிரப்படுத்தப்பட வேண்டும். இதற்கு, கட்சி விமர்சனம்–சுய விமர்சனம் என்ற நெருப்பில், எல்லா பலஹீனங்களும் களையப்பட்டு புனரமைக்கப்பட்டாக வேண்டும்' என்று தோழர் கோஷ் அக்கட்டுரையை முடிக்கிறார்."

தேச விடுதலையும், பாட்டாளி மக்களின் நல்வாழ்வும் சாத்தியமாக்கப்பட, சகல ஜனநாயக சக்திகளையும் திரட்ட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், எத்தனைவித மான கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

இதைச் சாதிக்க, கட்சி வலுவானதாக்கப்படவேண்டியது மிக மிக அவசியம். வலுவிலும், இயங்குவதிலும் சிறந்த கட்சியாக வளர, கட்சி ஊழியர்களும், அங்கத்தினர்களும் சித்தாந் தத்துறையிலும், ஸ்தாபனப் பண்பாட்டிலும் தேர்ந்தவர்களாகவேண்டும். பல்லாயிரக்கணக்கான விதத்தில் மக்களுடன் தொடர்புகொள்ளும் ரீதியில் கட்சி கட்டப்பட்டாகவேண்டும் என்ற உண்மையை, அனுபவப் பண்புடன் கூறுகிறார்.

சித்தாந்தத்திலும், அரசியலிலும், கட்டுப்பாட்டிலும் சிறந்து விளங்க, கட்சியைப் பற்றிய தவறான கருத்துக்களைப் போக்கி, ஸ்தாபனத்தைப் பற்றி லெனின் — ஸ்டாலின் போதனைகளை ஆதாரமாகக்கொண்ட உண்மையான கருத்துக்களைக் கொள்ள விரிவான விளக்கத்தைக் கொடுக்கும் மிக சிறந்த வெளியீடு இது.

பலமிக்க கட்சி வேண்டும் என கட்சி அங்கத்தினர்களும், அனுதாபிகளும் விரும்புகிற இச்சமயத்தில், இக்கட்டுரை வெளியிடப்பட்டிருக்கிறது. நமது விருப்பம் நிறைவேறி, கட்சி சகல வழிகளிலும் பலப்படுத்தப்பட்டு முன்னேற இப்பிரசுரம் மிகப்பெரிய உதவியை அளிக்கும் என்பதில் சற்றேனும் சந்தேகம் இருக்கமுடியாது. ஆகவே, கட்சி அங்கத்தினர்களும், அனுதாபிகளும் ஊன்றிப் படித்து, முறையான விவாதத்தை நடத்துவதற்கு வசதியளிக்கும் என்கிற ஒரே நோக்கத்துடன் இப் பிரசுரத்தை வெளியிடுகிறோம்.

சென்னை,<br>
28—11—52.

தமிழ்நாடு கமிட்டி<br>
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

# நம்முடைய சில பிரதான பலஹீனங்கள்

—★—

நேரடியான பிரிட்டிஷ் ஆட்சி முடிந்ததற்குப் பின் கடந்த 6 வருடங்களில் இந்தியாவில் மிகவும் முக்யத்வம் பொருந்திய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம், தேர்தல் அறிக்கை, பொதுத் தேர்தல்கள் சம்பந்தமான விமர்சனம் ஆகியவற்றில் இந்த சம்பவங்களில் மிகவும் முக்யமானவை பற்றிக் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

ஒரு சில வருடங்களுக்கு முன்புதான் இந்திய மக்களிடத்தில் தன்னிகரில்லா மதிப்பும் செல்வாக்கும் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி பெருவாரியான ம்க்கள் ஆதரவை இழந்துவிட்டது என்பதை கடந்த பொதுத் தேர்தல்கள் வெட்டவெளிச்சமாக்கின.

மக்களிடத்தில் காங்கிரஸ் தொடர்ந்து ஆதரவிழந்து வந்தது. பொதுத்தேர்தல் முடிந்ததற்குப் பினுல் காங்கிரஸின்மேல் மக்களின் அதிருப்தி மிகவும் வேகமாக வளர ஆரம்பித்தது. ஏற்கனவே, கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கூடியபோது இதை எடுத்துக் காட்டியது.

மேலும், தேச சுதந்திரத்தைப் பாதுகாப்பது, அதை விரிவுபடுத்துவது, ஏகாதிபத்யப் பிடிப்பையும், நிலப்பிரபுத்வ சுரண்டலையும் பரிபூர்ணமாக ஒழித்துக்கட்டுவது, ஆகியவற்றிற்காகவும், சந்தோஷமும், சுபிட்சமும் நிறைந்த வாழ்க்கைக்காகவும் இந்திய மக்கள் நடத்தும் இயக்கம், சமாதானத்திற்

காக முற்போக்கான ஜனசமூகம் நடத்திவரும் போராட்டத்துடன் மேலும், மேலும் அதிகமாகப் பிணைந்து வருகிறது. ஆசிய, பசிபிக் நாடுகளின் சமாதானக் காங்கிரசின்பால் எல்லாப் பகுதி மக்களுக்கும் ஏற்பட்ட மகத்தான ஆர்வம், நாட்டில் பலபாகங்களில் "ஆசிய சமாதான வாரம்" வெற்றிகரமாக அனுஷ்டிக்கப்பட்டது, 10 நாட்களில் பம்பாயில் 50,000 சமாதானக் கையெழுத்துகள் வாங்கியது, சென்னையில் நடைபெற்ற பிரம்மாண்டமான சமாதானக் கூட்டம், பல மாகாணங்களில் ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் நடைபெற்ற பெரிய சமாதான மகாநாடுகள், இறுதியாக ஜலந்தரில் நடைபெற்ற அகில இந்திய சமாதான மகாநாடு, ஆகிய இவையெல்லாம் சமாதான இயக்கத்தின் வளர்ந்து வரும் பலத்தையும், விச்சையும் சுட்டிக் காட்டுபவையாகும்.

சர்க்காரின் கொள்கைகளுக்கும், கடைப்பிடிக்கும் முறைகளுக்கும் புதிய, புதிய பகுதி மக்களிடையிலும் எதிர்ப்பு பரவிவருகிறது. தேசிய பூர்ஷவாக்களின் சில பகுதிகள்கூட எதிர்ப்பைக் காட்ட ஆரம்பித்துள்ளன. வெகுஜனப் போராட்டங்கள் அளவிலும், தன்மையிலும் மேல் நோக்கி வளர்ந்து வருகின்றன. ஆளும் கட்சியாகிய காங்கிரஸ் ஒரு ஆழ்ந்த நெருக்கடியில் சிக்குண்டிருக்கிறது. காங்கிரசுக்குள்ளே முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ளன.

தேர்தல்களுக்குப் பின்னால் நிகழ்ந்துள்ள சம்பவங்களைப் பற்றி பரிசீலனை செய்கையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ பின் வருமாறு கூறியது: "கடந்த 6 மாதகால நிகழ்ச்சிகள் ஏதோ தற்செயலாக ஏற்பட்டவையல்ல. அல்லது அவைகளைத் தற்காலிகத் தன்மைவாய்ந்தவை என்றும் கருத முடியாது. அவைகள் நீடித்து வளரும். ஏனெனில், அவை ஆழமாக வேர் பாய்ந்துள்ள பொருளாதார, சமூகக் காரணங்களிலிருந்து எழுகின்றன.

ஆனால் ஏற்கனவே சொல்லப்பட்ட விஷயங்களிலிருந்து; விரோதி ஏற்கனவே தோல்வியின் விளிம்பில் இருக்கிறான் என்றோ, அல்லது நம்மை எதிர்நோக்கியுள்ள கடமைகள் சுலபமாகிவிட்டனவென்றோ முடிவுசெய்து விடக்கூடாது. அதற்கு மாறாக, விரோதியிடத்தில் இன்னமும் அதிக சக்தியிருக்கிறது. இன்னும் ஏராளமான செல்வாக்கு அவனுக்கு உண்டு. தந்திரமாக சூழ்ச்சி செய்வதற்கு அவனிடத்தில் இன்னும் ஏராளமான பின பலமும், சாமர்த்தியமும் உண்டு. அவனுடைய பலம் காங்கிரஸ் கட்சியின் நேரடியானசெல்வாக்கின் காரணமாக மட்டுமின்றி, நாட்டின் பல பாகங்களில் இன்

னும் நிலப்பிரபுத்துவத்திற்கும், வகுப்புவாத பிற்போக்குக் கொள்கைகளுக்கும் இருக்கும் செல்வாக்கின் காரணமாகவும் நீடித்திருக்கிறது. மேலும், பொதுத் தேர்தல்களுக்குப் பின் மக்களிடையே ஏற்பட்ட சட்டப் பற்றுவாதப் பிரமைகள், ஓட்டுப் பெட்டியினால் எல்லாம் சாதித்துவிட முடியுமென்ற பிரமைகள், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி ஒரு பூர்ஷ்வா-சீர்திருத்தவாத "எதிர்க் கட்சிக் கூட்டமைப்பாக" ஆவதற்கு செய்யப்படும் முயற்சியினால் பல மடையும் பிரமைகள் - ஆகியவற்றிலும் விரோதியின் பலம் அடங்கியுள்ளது.

ஆகவே, மிகப்பெரிய கடமைகள் நம் கட்சியை எதிர் நோக்கியுள்ளன. பொலிட்பீரோ அவைகளைப்பற்றி பின்வருமாறு கூறியுள்ளது. "வெகுஜன இயக்கத்தை பலப்படுத்துவது, தங்களுடைய உடனடிக் கோரிக்கைகளைப் பெறுவதற்காக மக்களுக்கு உதவியளிப்பது அவர்களின் வெகுஜன ஸ்தாபனங்களைக் கட்டி வளர்ப்பது; இந்த கடமைகளை நிறைவேற்றுவதின் மூலம் மக்களின் தலைசிறந்த புதல்வர்களையும், புதல்விகளையும் கட்சிக்குள் அங்கத்தினராகத் திரட்டுவது ஆகியவற்றின் மூலம், தொடர்ந்து வெகுஜன இயக்கத்தை வளர்ப்பது".

இன்று கட்சியை எதிர்நோக்கியுள்ள கஷ்டங்கள் ஒரு குறிப்பிட்ட தன்மைவாய்ந்தவை என்று பொலிட்பீரோ சுட்டிக்காட்டுகிறது. அவை வெகுஜன இயக்க வளர்ச்சியுடன் சம்மந்தப்பட்டவை; கட்சியின் செல்வாக்கு வளர்ச்சியடைவதுடன் சம்பந்தப்பட்டவை. ஆகவே, கட்சி நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளின் வளர்ச்சியுடனும் சம்பந்தப்பட்டவை.

இன்று வெகுஜன இயக்கம் வளர்ச்சியடைவதுடன்; அரசியல் விழிப்பு புதிய புதிய பகுதிகளுக்கும் புதிய பிரதேசங்களுக்கும் பரவுவதுடன், கட்சியின் செல்வாக்கு அமோகமாக வளர்வதுடன்; நம்முடைய கடமைகளும், பொறுப்புகளும் பல மடங்கு அதிகரித்துள்ளன. உடனடிக் கோரிக்கைகளை பெறுவதற்கான போராட்டங்களில் மக்களுக்கு நாம் தலைமை தாங்கவேண்டும். தொழிலாளிகள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகள்-ஆகியோரை நாம் ஸ்தாபன ரீதியாகத் திரட்டவேண்டும். அம்மாதிரியே, வாலிபர்கள், பெண்கள் மாணவர்கள், நடுத்தர வர்க்க உத்தியோகஸ்தர்கள், கைத் தொழில் புரிபவர்கள், நுட்ப வேலைத் தொழிலாளிகள் ஆகியோரையும் சங்கங்களில் நாம் திரட்டியாகவேண்டும், கலை

ரங்கத்திலும் நாம் போராட்டம் நடத்தியாகவேண்டும். பார்லிமெண்டிலும் சட்டசபைகளிலும் மக்களின் நலவுரிமைகளுக்காக நாம் போராடவேண்டும். பல தினசரிப் பத்திரிகைகளையும், வாரப் பத்திரிகைகளையும் நாம் நடத்தவேண்டியிருக்கிறது. தற்கால தேச, சர்வதேசப் பிரச்னைகளைப் பற்றி நாம் பிரசுரங்களை வெளியிடவேண்டியதிருக்கிறது. ஐக்ய முன்னணி கட்டுவதற்காக இதர கட்சிகளுடன் நாம் பேச்சு வார்த்தைகள் நடத்தவேண்டியதிருக்கிறது. சர்க்காருடனும் ஸ்தல அதிகாரிகளுடனும் நாம் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டியுள்ளது. ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் நடைபெறும் தேர்தல்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளவேண்டியுள்ளது. இந்திய மக்களின் அடிப்படையான நலவுரிமைகளுக்கு ஒத்த முறையிலும், அவர்களின் ஜனநாயக உரிமைகளுக்கும், தேச சுதந்திரத்திற்கும் ஒத்த முறையிலும் சகல பகுதி மக்களின் கோரிக்கைகளை வகுத்து அவைகளுக்காகப் பாடுபட, அம் மக்களிடையே நாம் வேலை செய்து, அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. வேலையில்லாதோருக்கும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நாம் நிவாரண உதவி ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. சமாதானத்திற்காக ஒரு சக்தி வாய்ந்த இயக்கத்தை நாம் வளர்க்க வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் கட்சி யூனிட்டுகள் இந்த வேலைகளையெல்லாம் ஒன்றுக்கொன்று இணைத்து நடத்தவேண்டும்; இவைகளுக்கு வழிகாட்ட வேண்டும்; உதவி செய்தாக வேண்டும்.

இன்று, பொது மக்களுடன் சேர்ந்து முன்செல்லும் ஒவ்வொரு சமூகப் பகுதியைச் சேர்ந்தவர்களும் தங்களுக்கு உதவிக்காகவும், வழிகாட்டலுக்கும் கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்நோக்குகின்றனர் என்றால் அது மிகையாகாது. கம்யூனிஸ்ட் கட்சி யூனிட்டுகள் இல்லாத பிரதேசங்களிலும், கம்யூனிஸ்ட் கட்சிதான் ஏழை மக்களுக்காக, சாதாரண மனிதர்களுக்காகப் போராடும் கட்சியென்பதை மக்கள் உணர்ந்துள்ளனர். அவர்கள் தங்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்டுவதற்கும், என்ன செய்யவேண்டுமென்று வழிகாட்டுவதற்கும் நம்மை அணுகி அழைக்கிறார்கள்.

இந்தப் புதிய பொறுப்புகளில் ஒரு மிகச்சிறு பகுதியை நிறைவேற்றுவதற்கும், இந்த மிகப்பெரிய கடமைகளில் ஒரு பகுதியை அமுல் நடத்துவதற்கும், கட்சிக்கு 'கேடர்'கள் தேவையாயுள்ளது. மிகப்பெரிய அளவுக்கு ஏராளமான கேடர்கள் தேவையாயிருக்கிறது. கட்சிபலம் பொருந்தியதாக இருக்

கிறதென்றால், அதனுடைய அங்கத்தினர்களின் எண்ணிக்கையினால் மாத்திரமல்ல; ஆனால் விசேஷமாக, அங்கத்தினர்களின் தரம், கட்சியிடத்தில் அவர்களுக்குள்ள விஸ்வாசம், சித்தாந்தரீதியான பயிற்சி ஆகியவைகளிலும் கட்சியின் பலம் அடங்கி இருக்கிறது என்பதையும் இங்கே நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். நமக்குத் திறமையான கிளர்ச்சிக்காரர்கள் வேண்டும்; கட்சிப் பத்திரிகைகளுக்கு எழுத்தாளர்கள் வேண்டும்; போதகர்கள் வேண்டும்; மக்களையும், அவர்களின் இயக்கங்களையும் ஸ்தாபன ரீதியாகத் திரட்டுபவர்கள் வேண்டும்; முன்கையெடுத்து வேலை செய்யும் திறமையும், தலைமை தாங்கும் திறமையும், ஒவ்வொரு பிரதேசத்திலும் கட்சியின் பொதுவானக் கொள்கையை லாகவமான முறையில் உபயோகிக்கும் திறமையிலும் வெகு ஜனங்களின் அரசியல் தரத்தையும் ஸ்தாபன உணர்வின் மட்டத்தையும் இடைவிடாமல் உயர்த்தும் திறமையும்கொண்ட கேடர்கள் — சித்தாந்தத் துறையில் வளர்ச்சியும் அரசியல் துறையில் பயிற்சியும் பெற்ற கேடர்கள் நமக்கு வேண்டும்.

அத்தகைய கேடர்கள் நமக்கு மிகக் குறைந்த தொகையினரே உள்ளனர். அந்தச் சிலரும் தாங்க முடியாத வேலைப் பளுவைச் சுமந்துகொண்டிருக்கின்றனர். இதன் விளைவென்னவெனில், நம்மை எதிர்நோக்கியுள்ள கணக்கிலடங்காத வேலைகளில் பலவற்றை நாம் துவங்கவோ, நிறைவேற்றவோ முடியாத நிலையிலிருக்கின்றோம்.

இன்று பொதுஜன இயக்கத்தைத் திரட்டுவதில் வெற்றி பெறுவதானது, கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டமிட்ட, ஸ்தாபனரீதியான வளர்ச்சியுடனும், ஏற்கனவே கட்சியுள்ள இடங்களில் அதைப் பலப்படுத்துவதுடனும், இன்னும் கட்சியில்லாத இடங்களில் அதைப் பரப்புவதுடனும் பிரிக்கமுடியாமல் இணைந்திருக்கிறது; அதைச் சார்ந்துதான் இருக்கிறது என்றுகூடக் கூறலாம். இதைச்செய்யாமல், வெகுஜன இயக்கத்தைப் பெரிய அளவிற்குப் பலப்படுத்த முடியாது. ஏற்கனவே உள்ள இயக்கத்திற்கும் சரியாக வழிகாட்ட முடியாது; அதனுடைய சாதனைகளை-வெகுஜன ஸ்தாபனங்களின் உருவத்தில்-உறுதிப்படுத்தவும் முடியாது. இன்று ஸ்தாபன அமைப்பு ஒரு மிக முக்யமான அரசியல் அம்சமாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இன்று நமக்குத் தேவையானதென்னவெனில் ஒரு பலம் பொருந்திய கட்சியே. அதனுடைய அங்கத்தினர் தொகை விரிவடைந்து கொண்டிருக்க வேண்டும். நம் கட்சியின அணியிலே இருந்து கொண்டு

தன்னலத் தியாகத்துடன் போராடுவதற்குத் தயாராயுள்ள உண்மையிலேயே அதிக எண்ணிக்கையுள்ள கேடர்கள் இருக்க வேண்டும்; அரசியலிலும், கட்டுப்பாட்டிலும் உறுதியானவர்களாக இருக்கவேண்டும். கட்சி, வெகுஜனங்களிடையில் அசைக்க முடியாத வேர் பாய்ந்ததாக இருக்க வேண்டும். ஆயிரக்கணக்கான வழிகளில் பல்வேறு விதமான நடவடிக்கைகள் மூலம் அவர்களுடன் பிணைந்திருக்க வேண்டும்- அக்கட்சிக்கு தொழிற்சாலைகளிலும், பேக்டரிகளிலும் ஜீவனுள்ள சுறுசுறுப்பான யூனிட்டுகள் இருக்க வேண்டும், கிராமங்களிலும், ஒவ்வொரு ஸ்தலத்திலும், நம் மக்களின் ஒவ்வொரு பகுதியினரிடத்திலும் அத்தகைய யூனிட்டுகள் இருக்கவேண்டும். எந்த மக்களிடையே அந்த யூனிட்டுகள் வேலை செய்கின்றனவோ, அந்த மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அவர்களின் தலைவர்களாகக் கருதப்படும் முறையில் அந்த யூனிட்டுகள் செயல்புரிய வேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும், பிரதேசத்திலும், ஒவ்வொரு போராட்ட அரங்கத்திலும், போதுமான அளவு அதிக எண்ணிக்கையுடைய, போதிய அளவு உறுதிபடைத்த, போதிய அளவு வளர்ச்சியடைந்த கட்சி யந்திரம் இல்லாமல், வெகு ஜனங்களுக்கு நாம் சரியாகத் தலைமை வகிக்க முடியாது. இன்று நமக்குள்ள கஷ்டங்களில் பல, இது இல்லாததின் காரணமாகவே ஏற்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் 26 லட்சம் ஓட்டுகளை நாம் பெற்ற சென்னை ராஜ்யத்திலும்கூட (இன்னும் அதிக ஸ்தானங்களில் நாம் அபேட்சகர்களை நிறுத்தியிருந்தால் இன்னும் அதிக ஓட்டுகளைப் பெற்றிருக்க முடியும்) நம்முடைய கட்சி அங்கத்தினர் தொகை, நமக்குக் கிடைத்த ஓட்டுகளில் 1 சதவிகிதத்திற்கும் மிகவும் குறைவானதே. இதர மாகாணங்களிலும் இத்தகைய ஒரு நிலைமையே இருந்துவருகிறது. இந்த அங்கத்தினர்களும் கூட சரியாக ஸ்தாபனரீதியாக இயக்கப்படுவதில்லை. இதில் ஒரு பகுதி மாத்திரமே சித்தாந்த ரீதியிலும், ஸ்தாபன ரீதியிலும் வளர்ச்சியடைந்துள்ளது.

கட்சியை எதிர்நோக்கியுள்ள ஒரே ஒரு பெரிய பிரச்னை இதுதான். பொலிட் பீரோ வலியுறுத்துவதுமாதிரி, முன்னெப்பொழுதைக் காட்டிலும் அதிகமாக இப்பொழுது, ஸ்தாபனப் பிரச்னை ஒரு பிரதான அரசியல் விஷயமாகிவிட்டது. வெகுஜன இயக்கத்தின் வளர்ச்சியின் வேகத்தை அதுதான் நிர்ணயிக்கிறது.

நம் தோழர்களில் பெரும்பான்மையோர் இதை இன்னும்

சரியாக உணரவில்லை. நம்முடைய இன்றைய கஷ்டங்களை நம்முடைய பழைய கஷ்டங்களை எப்படிப் பார்த்தார்களோ அப்படியேதான் பார்க்க முயற்சிக்கின்றனர். கடந்த காலத்தில் நம்முடைய வேலையில் கஷ்டங்கள் ஏற்பட்டபொழுதெல்லாம் நம் வளர்ச்சிக்குத் தடைகள், அல்லது நாம் விரும்பிய மாதிரி வேகமாக முன்னேறமுடியாமல் தோல்விகள் ஏற்பட்டபொழுதெல்லாம், அதற்கு நாம் அனுஷ்டிக்கவேண்டிய உடனடியான அரசியல் கோஷங்கள், போராட்ட வடிவங்கள் ஆகியவை ரூபத்தில்தான் பதில் சொல்லப்பட்டுள்ளன. அதனுடைய விளைவென்னவெனில், சரியான கோஷங்கள், சரியான போராட்ட முறைகள் ஆகியவைகளைக்கொண்டு சிறிது முன்னேற்றம் ஏற்பட்ட அதேசமயத்தில், அடிப்படையான பலவீனங்கள், கட்சியினுடைய பலவீனமே, முன்போலவேதான் இருந்துவந்துள்ளது. ஏற்பட்ட முன்னேற்றத்தையும் உறுதிப்படுத்த முடியவில்லை.

ஆனால் இன்று நமக்குள்ள கஷ்டங்கள் வேறு வகையைச் சேர்ந்தன. முக்யமாக, எல்லாவற்றிற்கும் மேலாக, அவை நம்முடைய ஸ்தாபன பலஹீனத்திலிருந்து ஏற்படுகின்றன. பொலிட் பீரோ தீர்மானத்தில் கூறியுள்ளதைப போன்று, சரியான உடனடியான கோஷங்களும், பிழையற்ற போர் தந்திரங்களும் அனுஷ்டிக்கப்பட்ட போதிலும்கூட அவை ஏற்படுகின்றன. ஆகவே, கட்சிக்கு முன்னுள்ள மிகப் பெரிய அரசியல் பிரச்னையாக ஸ்தாபன பிரச்னையை சமாளித்தாக வேண்டும்.

அதற்கு, கட்சி ஸ்தாபனம் சம்பந்தமான தத்துவார்த்த தெளிவை முதல் முதலாக அடையவேண்டும்; தவறான கருததுக்களை விட்டொழிக்கவேண்டும. இதுவரையிலும் இருந்து வந்த தவறான கண்ணோட்டங்களை விட்டொழிக்க வேண்டும்.

ஸ்தாபன அமைப்பு—கட்சி ஸ்தாபனமென்பது—பொருளாதார, அரசியல் போராட்டங்களின் ஒரு உப-பொருளென்று அதாவது நாம் சரியான கோஷங்களைக் கொடுத்து போராட்டங்களை சரியாக நடத்தினால் கட்சி அனேகமாக தானாகவே வளரும் என்று இதுவரை ஒரு தவறான கருத்து இருந்து வந்துள்ளது. ஆயினும் இது வெளிபபடையாக சொல்லப்பட்டதில்லை.

அதேபோன்று இன்னொரு தவறான கருத்தென்னவெனில், "இயக்கத்தின் வளர்ச்சி"யின் கூடவே, அதன் காரணமாகவே கட்சி வளரும் என்பதாகும். "இயக்கத்தின்

வளர்ச்சி"யே, கட்சியின் தலைமையின் கீழ் மாத்திரமே, சரியாகவும், சரியான பாதையிலும் ஏற்பட முடியுமென்பதையும் கட்சிவளர்ந்தால்தான் இந்தத் தலைமை சரியாக பணியாற்ற முடியும் என்பதையும் உணருவதில்லை. அதாவது; கட்சியின் வளர்ச்சியின் பேரில்தான், உண்மையான வெகுஜன புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சி பெரிய அளவுக்கு சார்ந்திருக்கிறது என்பது உணரப்படுவதில்லை. இத்தகைய கட்சி வளர்ச்சியில்லாவிடில் இயக்கமே தோல்வியில் முடியும்.

தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் வெகுஜன ஸ்தாபனங்களைக் கட்டுவதன் மூலம் கட்சி வளருகிறது என்ற ஒரு கருத்தும் இருந்து வருகிறது. இந்தக் கருத்து எவ்வளவு தவறானவை எனபதை நம்முடைய சரித்திரமே எடுத்துக் காட்டுகிறது. பல தடவைகள் நாம்வெகுஜன ஸ்தாபனங்களைக் கட்டியிருக்கிறோம், ஆனால் நம்மால் அவைகளை விஸ்தரிக்க முடியவில்லை. பல பிரதேசங்களில் அடக்குமுறையின முன்னே அவைகளை நிலைநிறுத்திக் காப்பாற்றவும் நம்மால் முடியவில்லை. காரணமென்னவெனில், அந்த ஸ்தாபனங்களின் அடிப்படையான யூனிட்டுகளில் போதிய அளவு பெரிய; போதிய அளவு உறுதியான, போதிய அளவு வளர்ச்சியடைந்த கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களின் குழுக்கள் இருந்ததில்லை.

மற்றுமொரு கருத்து என்னவெனில், பொதுவான ஏகாதிபத்திய-எதிர்ப்பு மனோபாவம் வளர்ச்சியடைவதே ஒரு காலனி நாட்டில் இது அநேகமாக இயற்கையாகவே ஏற்படுகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்குப் போதுமான அடிப்படையாகும் என்பது; இந்த மனோபாவத்தைக் கட்சி ஆழப்படுத்தினால், மக்களின் முன்னால், மிகவும் போர்க்குணம் படைத்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்சியாகத் தோற்றமளித்தால், அதுவே கட்சி வளருவதற்கு ஏதுவாக இருக்கும் என்பது. ஏகாதிபத்திய-எதிர்ப்பு. தேசியப் புரட்சிகர மனோபாவத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கம்யூனிஸ்ட் கட்சி வளருவதல்ல; ஆனால் அந்த மனோபாவத்தை மேலும் உயர்ந்த கட்டத்திற்குக் கொண்டு போவது; தொழிலாளி வர்க்கத்திற்கும், முனனேற்றமடைந்த வெகு ஜனங்களுக்கும் ஒரு பிரத்யேகமான மனோபாவத்தை ஊட்டுவத; அதாவது மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் மனோபாவத்தை, சோஷலிஸ்ட் மனோபாவத்தை ஊட்டுவது; அதற்கு பூர்ஷ்வாக்களின் தத்துவங்கள், கருத்துகள் ஆகியவற்றை எதிர்த்து கூர்மையான சித்தாந்த ரீதியான போராட்டத்தை நடத்துவது; மார்க்ஸ், எங்கல்ஸ்,

லெனின், ஸ்டாலின் ஆகியோரின் சர்வ சக்தி வாய்ந்த கருத்துக்களை வெகுஜனங்களிடத்தில் பெரிய அளவிற்குப் பரப்ப வேண்டும்.

கட்சியைப்பற்றிய பல தவறான கருத்துகள் தோன்றியுள்ளன. இது, உடனடியான பிரச்னைகளுக்காகக் கிளர்ச்சி செய்வது, வேலை நிறுத்தங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவது—ஆகியவை மாத்திரமே கட்சியின் வேலை என்ற கண்ணோட்டத்தில் கொண்டுபோய் விட்டுள்ளது. இந்தக் கருத்தின் ஸ்தாபன விளைவு எப்படி ஏற்பட்டுள்ளது எனில்; கட்சியினுடைய தினசரி வேலை பூராவையும் "முழு நேர ஊழியர்களே" செய்வதும், கட்சி அங்கத்தினர்களில்பெரும்பான்மையோர் பெரிய இயக்கங்கள் அல்லது வெகுஜனப் போராட்ட காலங்களைத் தவிர, மற்ற சமயங்களில் ஒரு வேலையுமில்லாதிருப்பது என்பதே. இதன் விளைவாக ஒரு முனையில் அதிகாரவர்க்க மனோபாவம்; மற்றைய முனையில் ஸ்தாபன வழவழாத்தன்மை. இதன் காரணமாகக் கேடர்கள் ஸ்தம்பிப்பு நிலைமையை அடைகின்றனர். அவர்களின் வளர்ச்சி தடை செய்யப்படுகிறது. இது கட்சியின் வளர்ச்சியையே தடை செய்கிறது.

கட்சியின் முன்னுள்ள கடமைகளின் தன்மை, கட்சியின் பாத்திரம் இவை பற்றிய மிகவும் தவறான கருத்துகள் பெரிய அளவிற்குப் பரவியுள்ளன. மார்க்ஸிஸம்-லெனினிஸத்தின் அடிப்படையில் பெரிய அளவுக்கு அரசியல் கல்வியை போதிப்பது; சர்க்காரை ஸ்தூலமாக அம்பலப்படுத்துவது; தங்களுடைய சமூக இழிநிலைக்கெதிராகப் பெண்களைத் தட்டி எழுப்புவது; ஐந்து வல்லரசு சமாதான ஒப்பந்த வேண்டுகோளை மக்களிடத்தில் பெரிய அளவிற்குப் பரப்புவது; மக்களை பாதிக்கும் அன்றாடப் பிரச்னைகளைப் பற்றி பிரசுரங்களை வெளியிட்டு விரிவாக விற்பனை செய்வது; கட்சிப் பத்திரிகை விற்பனையை அதிகப்படுத்துவது; கலைக் கழகங்கள், கல்வி, விளையாட்டுக் கழகங்கள், இதர கழகங்களையும், சங்கங்களையும் ஏற்படுத்துவதும், அவற்றில் வேலை செய்வதும், வெகுஜன ஸ்தாபனங்களையும், ஏன், கட்சியையும் கட்டி அமைப்பது, இவைகளெல்லாம் பல தோழர்களால் போராட்டங்களென்று கருதப்படுவதில்லை; ஆனால் ஏதோ சில "நடவடிக்கைகள்" எனறே அவர்கள் அவற்றைக் கருதுகிறார்கள்—அவற்றைப் புரட்சிகரமான காரியங்களாகக் கருதுவதில்லை.

இத்தகைய தவறான கருத்துக்களுக்கெல்லாம் மூலாதாரம் என்ன? அவைகளுக்கு வேர்கள் எங்கிருக்கின்றன?

காரியங்கள் தானாகவே நடைபெறும் என்ற கோட்பாட்டுக்குத் தலைவணங்குவதிலிருந்தே இவைகளெல்லாம் அடிப்படையாக எழுகின்றன. வர்க்கப் போராட்டத்தைப் பற்றி ஒரு குறுகிய, எல்லைக்குட்படுத்தப்பட்ட, மார்க்ஸிஸத்திற்கு மாறான ஒரு கண்ணோட்டத்திலிருந்தே இவை எழுகின்றன. இந்தக் குறுகிய கண்ணோட்டம் புதிதல்ல. கடந்த காலத்திலும்கூட இத்தகைய கண்ணோட்டம் இருந்ததுண்டு.

கடந்த காலத்தில் நாம் நடத்திய போராட்டங்களைப் பொதுவாகப் பரிசிலனை செய்தால் நமக்குப் பின்வரும் சித்திரம் கிடைக்கிறது, உலகத்தில் மற்றெல்லா நாடுகளிலும் ஏற்பட்டதுபோலவே, நம்முடைய நாட்டில் வளர்ந்த போராட்டத்திற்கும் மூன்று அம்சங்கள் உண்டு; அவை: பொருளாதார, அரசியல், சித்தாந்தரீதியான அரங்கங்கள்.

பொருளாதார அரங்கத்தில், தொழிலாளி வர்க்கமும்; விவசாயிகளும், தங்களுடைய போர்க்குணம் படைத்த வர்க்க ஸ்தாபனங்களின் தலைமையின் கீழும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழும் எண்ணற்ற போராட்டங்களை நடத்தியுள்ளன. அவைகளில் சிலவற்றில் லட்சக்கணக்கான மக்கள் பங்கெடுத்திருக்கின்றனர். ஈவிரக்கமற்ற அடக்குமுறைக்கு முன்னே வீராவேசத்தையும், தியாகம் செய்யும் திறமையையும், முன் கையெடுத்துப் பணியாற்றுவதையும் அவர்கள் காட்டியுள்ளனர். இந்தப் போராட்டங்களின் பயனாக, முக்கிய கோரிக்கைகளையும், சலுகைகளையும் பெற்றுள்ளனர். பல பிரதேசங்களில் வெகுஜன ஸ்தாபனங்களும் கட்டப்பட்டுள்ளன.

அரசியல் துறையில், தொழிலாளி வர்க்கம் பல அரசியல் நடவடிக்கைகளை நடத்தியிருந்தாலும்கூட, அடிப்படையான விவசாய சீர்திருத்தத்திற்காகவும் அரசியல் உரிமைகளுக்காகவும் தெலிங்கானாவிலும், திரிபுராவிலும் ஏற்பட்டமாதிரி போராட்டங்கள் நடத்தியிருந்தாலும்கூட, கம்யூனிஸ்ட் கட்சிக்கு செல்வாக்கு வளர்ந்து கொண்டிருந்தாலும்கூட, நாம் முன்னேறியது அவ்வளவு குறிப்பிடத் தக்கதாயில்லை. நேரடியான பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில், பல முக்கிய, சுரங்கத் தொழில், ஆலைத் தொழில் பிரதேசங்களில், உள்ள தொழிலாளி வர்க்கம்கூட பூர்ஷ்வா; குட்டிபூர்ஷ்வா செல்வாக்கில்தான் இருந்துவந்தது; காங்கிரசின் தலைமையின் கீழ், நடத்தப்பட்டுவந்த தேசிய இயக்கத்தின் நேரடியான அதிர்ச்சி வேகத்தில்மட்டுமே அரசியல் நடவடிக்கைகளிலிறங்கியது.

ஆனால், சித்தாந்தத் துறையில்தான், நம்முடைய பல ஹீனம், நம் தலைமையின் கீழ் இயங்கிவந்த இயக்கத்தின் பல

ஹீனம் மிகவும் தெளிவான முறையில் வெளியாயிற்று. தொழிலாளி வர்க்கத்திற்கு மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட் சித்தாந்தம் புகட்டப்படவில்லை என்பது மாத்திரமல்ல; தொழிலாளி வர்க்கத்தின் மிகப் பெரும்பகுதி, தேச சுதந்திரத்தையே பூர்ஷுவாக்களால் போதிக்கப்பட்ட முறையில்தான புரிந்துகொண்டிருந்தார்கள். அதாவது நேரடியான பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பது என்றுதான் புரிந்துகொண்டிருந்தனர். தேச சுதந்திரத்தின் உள்ளடக்கத்தைப் பொறுத்த வரையிலும், ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் அமைப்பு, ஜனநாயகம் என்ற பிரதான பிரச்சினையைப் பொறுத்த வரையிலும் கூட நாம் பரந்த வெகு ஜனங்களுக்கு அரசியல் கல்வியை போதிக்கவில்லை. தேசிய பூர்ஷ்வா தலைமைப் பதவியின் துரோகத் தன்மையை அம்பலப்படுத்த நாம் தவறினோம் என்பதுமட்டுமல்ல; ஆனால் பல சந்தர்ப்பங்களில் "ஐக்கிய தேசிய முன்னணி"யைக் கட்டுவது என்பதின் பெயரால் அதைப் புகழ்ந்தும் வந்துள்ளோம். காந்தியத்தின் தீங்கு விளைவிக்கத் தக்க தத்துவங்களை எதிர்த்து குறிப்பிடத்தக்க எத்தகைய சித்தாந்த ரீதியான போராட்டத்தையும் நடத்தவில்லை.

வெகுஜனங்களிடத்தில் நம்முடைய அரசியல் பிரசாரமும், கிளர்ச்சியும் பொதுவான ஜனநாயக எல்லைக் கோட்டுக்கப்பால் போகக்கூடாது என்று கருதப்பட்டு வந்தது; மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட் கருத்துகள் கட்சியில் சேருகிறவர்களுக்கும், அல்லது கட்சியின் அனுதாபிகளாக ஆகிறவர்களுக்கு மட்டுமேதான் என்று கருதப்பட்டு வந்தது. நடைமுறையில், அனுதாபிகளுக்குங்கூட போதிய அளவு கல்வி அளிக்கப்படவில்லை.

லெனின், ஸ்டாலினுடைய பல நூல்களை நாம் இந்திய மொழிகளில் பிரசுரித்தோம். ஆனால் சாதாரண தொழிலாளியோ, விவசாயியோ புரிந்து கொள்வதற்கு அவசியமான முன்னுரையுடன் அவைகள் பிரசுரிக்கப்படவில்லை. இந்தியாவில் நம்மால் வெளியிடப்பட்ட நூல்கள் கிளர்ச்சித் தன்மை வாய்ந்தவையாக மட்டுமே இருந்தன. மார்க்ஸிஸ்ட் கண்ணோட்டத்தில் இந்தியப் பிரச்சினைகளைப் பரிசிலனை செய்யும் நூல்களை வெளியிட எந்த முயற்சியும் செய்யப்படவில்லை. அன்றாட சம்பவங்களெல்லாம் ஒரு பொதுவான ஜனநாயகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் மாத்திரமே மதிப்பிடப்பட்டன. தொழிலாளி வர்க்கத்தின் இறுதி லட்சியங்களின் அடிப்படையில் அந்த சம்பவங்களின் முக்யத்வம் கணக்கி

லெடுக்கப்படவில்லை. நாட்டின் தொழிற்சங்க, விவசாயிகள் இயக்கங்களின் சரித்திரத்தைக் கூட நாம் எழுதவில்லை. நாமே தலைமை வகித்து நடத்திய போராட்டங்களின் சரித்திரத்தைக் கூட வரையவில்லை; அந்தப் போராட்டங்களிலிருந்து படிப்பினைகளை வகுத்து, நம்முடைய கேடர்களுக்கு அந்தப் படிப்பினைகளை போதிக்கவில்லை. போராட்டங்களின் உண்மையான படிப்பினைகளைத் தொழிலாளி வர்க்கம் கற்றுக் கொள்ளாமல் தடுக்க பூர்ஷ்வாக்கள் செய்யும் முயற்சிகளை சித்தாந்த ரீதியில் எதிர்த்துப் போராடவில்லை.

இதனுடைய விளைவெல்லாம் என்னவெனில் தொழிலாளி வர்க்கம் மட்டுமல்ல, நம் கட்சி அங்கத்தினர்களிலே ஒரு பெரிய தொகையினரும் மார்க்ஸிஸ்ட் – லெனினிஸ்ட் உணர்வைத் தங்களுக்குள் வளர்க்கத் தவறினர். ஆகவே, தவிர்க்க முடியாமல் அரசியல் பொருளாதாரத் துறைகளிலும் வேலைகள் பாதிக்கப்பட்டன. ஏனெனில் வர்க்கப் போராட்டம் எல்லாத் துறைகளிலும் ஒரே சமயத்தில் நடத்தப்பட வேண்டியது மட்டுமல்ல; வர்க்கப் போராட்டத்தின் இந்த மூன்று முனைகளும் ஒன்றோடொன்று இணைந்தது என்பது மாத்திரமல்ல; இந்த உள் சம்பந்தத்தில் சித்தாந்த அரங்கமானது ஒரு பிரதான ஸ்தானத்தை வகிக்கிறது.

நம்முடைய ஸ்தாபன பலஹீனம் உட்பட, இன்று நம்முடைய பலஹீனங்களில் அநேகமாக எல்லாமுமே, இந்தத் தவறினால்தான ஏற்படுகின்றன என்று கூறிவிடலாம்; அதாவது சித்தாந்தப் பயிற்சியை கவனிக்காத தவறியது; உணர்வு, ஸ்தாபனம் ஆகியவற்றின் பாத்திரத்தை வற்புறுத்தத் தவறியதுமேயாகும்.

தோழர் ஸ்டாலின் நமக்கு போதிக்கிறார்:

“எந்த பகுதி அரசாங்க அல்லது கட்சி வேலையிலும் ஊழியர்களின் அரசியல் தரமும் மார்க்ஸிஸ லெனினிஸ ஞானமும் உயர்ந்ததாக இருந்தால், வேலையே நல்ல முறையிலும் பயன்தரத் தக்கதாக இருக்கும், வேலையின் விளைவு மேலும் அதிகம் பயனுள்ளதாக இருக்கும் என்பது ஒரு கோட்பாடாக ஏற்றுக்கொண்டாக வேண்டும். அதே போல், இதற்கு மாறாக, ஊழியர்களின் அரசியல் மட்டம் குறைந்ததாகவும், அவர்களின் மார்க்ஸிஸ—லெனினிஸ ஞானம் குறைவாக இருந்தால், வேலை சீர்குலைவதற்கும், தோல்வியடைவதற்கும் அதிக வசதியேற்படும்; ஊழியர்களே குறுகிய மனப்பான்மை கொண்டு சில்லரை விவகாரங்களில் கவனம்

செலுத்தும் அளவிற்கு, சரிந்து போகும் அளவிற்கு கொண்டு செல்லும்.''

சரியான அரசியல் சுலோகன்கள், சரியான ஐக்கிய அணி தந்திரங்கள், சரியான போராட்ட முறைகள்—இவை எல்லாம் அத்தியாவசியமானவையே. ஆனால் இவையெல்லாம் மேல் கமிட்டிகளுக்கு மாத்திரமன்றி கட்சியின் ஒவ்வொரு யூனிட்டுக்கும் அத்தியாவசியமானவை. இதற்கே கட்சி முழுமையின் தத்துவார்த்த—அரசியல் வளர்ச்சி தேவை. மேலும், சரியான அரசியல் சுலோகன்களும், சரியான ஐக்கிய அணி தந்திரங்களும், சரியான போராட்ட ரூபங்களும் நமது வெகுஜன செல்வாக்கை விரிவுபடுத்துகின்றன. வெகு ஜனங்களுடன் பிணைப்புகள் ஏற்படுத்துகின்றன; ஆனால் அவைகள் மட்டுமே கட்சியை வளர்ப்பதில்லை.

தன்னுடைய ஊழியர்களின் தத்துவார்த்த அரசியல் மட்டத்தை (தரத்தை) உயர்த்துவதன் மூலம் கட்சி வளர்கிறது. தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், நமது தேசத்தின் ஒரு மிக முக்கிய பகுதியாகிய புரட்சிகரமான படித்த பகுதியினர் ஆகிய இவர்கள் மத்தியில் மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட் உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் கட்சி வளர்கிறது. மார்க்ஸிஸ-லெனினிஸத்தின் அடிப்படையில் பரந்த வெகுஜனங்களிடையே அரசியல் பயிற்சி நடத்துவதன் மூலம் கட்சி வளர்கிறது. பூர்ஷுவா தத்துவத்தின் பல்வேறு அம்சங்களையும் எதிர்த்து கூர்மையான போராட்டத்தை நடத்துவதன்மூலம் கட்சி வளர்கிறது. எல்லா அரங்கங்களிலும் எல்லா சமூகப் பகுதிகளிலும் போராட்டத்தை நடத்தி கட்சி வளர்கிறது.

தங்களுடைய ஐந்தாண்டுத் திட்டங்கள், சமூக அபிவிருத்தித் திட்டங்கள் மூலமாகத் தேசத்திற்கு விமோசனம் ஏற்படுமென்று ஆளும் வர்க்கத்தினரும் அவர்களின் பிரதிநிதிகளும் பேசி வருகின்றனர். தங்களுடைய அன்னிய நாட்டுக்கொள்கை ஒரு சுதந்திரமான ஜீவனுள்ள நடுநிலைமைக்கொள்கை என்று தம்பட்டம் அடிக்கின்றனர். ஓட்டுப் பெட்டியின் மகிமை பற்றிப் பிரமைகளை அவர்கள் ஏற்படுத்துகிறார்கள். சென்ற காலத்தில் தொழிலாளி வர்க்க, விவசாயப் போராட்டங்களின படிப்பினைகளை. மக்களின் மனத்திலிருந்து அகற்ற அவர்கள் முயற்சிக்கின்றனர். அவர்களில் பலர், சோவியத் யூனியனும் மக்கள் சீனவும் ''சர்வாதிகாரங்கள்'' என்றும், அங்கு முதலாளித்துவ தேசங்களில் இருப்பதுபோல் ''சுதந்திரம் எதுவும் இல்லை'' என்றும் கண்டித்து கூக்குரலிடுகின்

றனர். வெவ்வேறு மொழிகள் பேசும் மக்களிடையே குரோதம் ஏற்படுத்தி வருகின்றனர்: மொழிவாரி மாகாணங்களுக்கான ஜனநாயக இயக்கத்தை சீர்குலைவுப் பாதையில் திருப்புகின்றனர். இதிலெல்லாம் வலதுசாரி-சோஷலிஸ்டுகள் இவர்களுக்கு உதவுகின்றனர்; இந்த வலதுசாரி சோஷலிஸ்டுகள் மார்க்ஸிஸத்திற்கு தங்களுக்கிருந்த போலிவிசுவாசத்தையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, (ஏற்கனவே அம்பலமாக்கப்பட்ட பூர்ஷுவா சித்தாந்தங்களை மக்களை ஏமாற்றி தவருன வழியில் அழைத்துச் செல்வதற்காக), புதிய ரூபத்தில் முன் வைக்கிருர்கள். ஆகவே, தத்துவார்த்தப் போராட்டத்தின் அவசியம் முன்பெல்லாம்விட இன்று மிக முக்கியமானது.

ஆனல் கட்சி பலமடைவதும் அதன் வளர்ச்சியும் ஒரு தத்துவார்த்த பிரச்னை மட்டுமல்ல, நமது ஊழியர்களுக்கு தத்துவார்த்த பயிற்சி கொடுப்பதும், வெகுஜனங்களிடையே தத்துவார்த்தப் போராட்டத்தை நடத்துவதுமட்டுமல்ல. இது ஒரு ஸ்தாபனப் பிரச்னையுமாகும், கட்சி முறைகளையும், கட்சிக் கட்டுப்பாட்டையும் மீண்டும் ஸ்தாபிக்கும் பிரச்னையுமாகும். இவைகள் (கட்சி முறைகளும், கட்டுப்பாடும்) கட்சியின் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன உள்ள காலத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்டன. ஸ்தாபனப் பிரச்னையிலும், தத்துவத்தின் முக்கியத்துவம் பற்றிய பிரச்னையில் மாதிரி; தவருன, மார்க்ஸிஸ-விரோத, தொழிலாளி வர்க்கக் கண்ணோட்டத்திற்கு விரோதமான கருத்துக்கள்—தனது கீர்த்தி பெற்ற "ஒரு அடி முன்னல், இரண்டு அடிகள் பின்னல்" என்ற புத்தகத்தில லெனின் எந்த தவருன கருத்துக்களை அம்பலப் படுத்தி போராடினரோ அந்த 'தவருன கருத்துகள்—(கட்சியின்) எல்லா மட்டங்களிலும் மலிந்து கிடக்கின்றன.

கட்சி ஸ்தாபன ரூபங்கள் (முறைகள்) பல தோழர்களால்; யாந்திரீகமானவை யென்றும் அதிகார வர்க்கத் தன்மை வாய்ந்தவை என்றும் கருதப்படுகின்றன. உட்கட்சி ஜனநாயகத்தைப்பற்றி அராஜக தன்மைவாய்ந்த எண்ணங்கள் பல யூனிட்டுகளில், மிகவும் தீங்கானமுறையில் பிரதிபலிக்கின்றன. பல தோழர்கள், யூனிட்டின அபிப்பிராயத்தைவிட; ஏன் மேல்கமிட்டியின் அபிப்பிராயத்தைவிட; தங்கள் சொந்த அபிப்பிராயங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை என கருதுகின்றனர். தங்கள் அபிப்பிராய வித்தியாசங்களை யூனிட்டுகளுக்கு வெளியே வெளியிடுகின்றனர். மற்றவர்களை தங்கள் அபிப்பிராயங்களுக்கு திருப்புவதற்காக சில தோழர்கள் யூனிட்டில் பேசுகிருர்கள்; அவர்கள் யூனிட்டில்

பேசுவது, தாங்களும் கற்றுக்கொள்ளலாம்; மற்றவர்களின் அபிப்பிராயங்களை தாங்களும் ஒத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு அல்ல.

சில தோழர்கள், தங்கள் அபிப்பிராயத்தை யூனிட் ஏற்றுக் கொள்ளாவிட்டால், யூனிட் தவறு செய்கிறது என்ற முடிவுக்கு வந்து, மெஜாரிட்டி முடிவை நிறைவேற்றுவதில் முழு மனதுடன் ஒத்துழைப்பதற்குத் தவறுகிறார்கள்.

பல பிரதேசங்களில், ஒன்று, மேல் கமிட்டிகள் கீழ் கமிட்டிகளுக்கு ரிபோர்ட் செய்வதில்லை, அல்லது, ஜெனரல்பாடி கூட்டத்தில் மட்டும் ரிபோர்ட் செய்யப்படுகிறது; இந்த ஜெனரல்பாடி கூட்டங்கள் கட்சியின் அடிப்படை யூனிட்டுகளுக்கு மாற்றாக ஆகிவிடுகின்றன. இயக்கங்களும், போராட்டங்களும் அவ்வபபோது போதுமான அளவு பரிசீலிக்கப்படுவதில்லை. அவற்றிலிருந்து படிப்பினைகள் கற்று ஒவ்வொரு பிரச்னையிலும் கட்சி ஒன்றுபடுத்தப்படுவதில்லை.

இன்னும் சில யூனிட்டுகளில், சென்ற காலக் குரோதங்கள்; உட்கட்சிப் போராட்ட காலத்தின் மிச்ச சொச்சங்கள்; ஒன்றுபட்டு இயங்குவதற்குக் குறுக்கே நிற்கின்றன; ஸ்தாபனப் பிரச்னைகளை முடிவு செய்யும் பொதுப் பார்வையைக் குழப்புகின்றன. இந்தக் குரோதங்கள் வேலையின் தரம் குறைவதில் கொண்டுபோய் விடுகிறது.

பல சந்தர்ப்பங்களில், வேலையில் திட்டமின்மை இருக்கிறது; பல வேறு அங்கங்களின் வேலைகளை இணைத்து நடத்துவதில்லை; சில முக்கிய தோழர்களிடம் அவர்கள் செய்வதற்கு சாத்தியமானதைவிட அதிகமாக வேலைகளை ஒப்படைத்தல்; நடைமுறையில் கமிட்டிகளின் தலைமைக்குப் பதில் தனிப்பட்ட தோழர்களின் தலைமையாக மாறிவிடுவது முதலியவை இருக்கின்றன. இந்த முறையில் கூட வேலைகள் நடக்கின்றன; ஆனால் கட்சி அணிகளின் முன்முயற்சி வளர்க்கப்படுவதில்லை; கட்சி யூனிட்டுகள் வெகுஜனங்களின் தலைவர்களாக ஒவ்வொரு பிரதேசத்திலும் வளர்க்கப்படுவதில்லை; கட்சி வேகமாக விரிவடைந்து ஒரு வெகுஜன சக்தியாக வளர்வதற்கு அத்தியாவசியமான, கட்சித் தோழர்களின் வளர்ச்சி, பயிற்சி செய்யப்படாமல் போகின்றது.

ஆகவே, கட்சியை வளர்க்கும் கடமையுடன் சேர்ந்தே கட்சியை ஸ்தாபன ரீதியாக வளர்க்கும் கடமையையும்—ஸ்தாபன ரீதியான கணகாணிப்பு, ஸ்தாபனத்தைப் பரிசுத்தப் படுத்துவது—நிறைவேற்றவேண்டும்.

இவற்றிலெல்லாம், இதுவரை நாம் மிகவும் குறைவாகவே செய்துள்ளோம். ஆகவேதான், நமக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. இதைப் பார்க்காமலிருந்தால் குறுக்கு வழியைக் கண்டுபிடிக்கும் முயற்சிக்குத்தான் கொண்டுவிடும். எப்படியாவது எல்லா சட்டசபைகளிலும், மற்றக் கட்சி பிரதிநிதிகளுக்கு தலைமையை விட்டுக்கொடுத்து மற்ற கட்சிகளுடன் ஒன்றுபட்டு ஒரு ஐக்கிய அணி ஏற்படுத்துவதில் நாம் வெற்றியடைந்தால், ஏதாவது ஒரு தந்திரத்தை கையாண்டு சில 'பயன் தரத்தக்க' நடவடிக்கைகளை திட்டமிட முடிந்தால், நம்மை எதிர் நோக்கும் பிரச்னைகளை தீர்த்துவிட முடியும் என சிலர் நினைக்கின்றனர். அத்தகைய "பரிகாரங்கள்" பரிகாரங்கள் அல்ல என்பதையும், அவை கட்சியை சிரழிப்பதில் கொண்டுவிடும் என்பதையும் அவர்கள் பார்க்கத் தவறுகிறார்கள். மற்றவர்கள் ஸ்தாபனத்தைப் பற்றி பேசினாலும் கூட, ஸ்தாபனத்தை ஒரு குறுகிய "நடைமுறை வாத" கண்ணோட்டத்திலிருந்து பார்க்கின்றனர். கட்சியை எதிர்நோக்கும் ஸ்தாபன அரசியல் பிரச்னைகளை பழைய முறையில்—"போராட்ட முறை" பிரச்னையாக மட்டும் அல்லது பிரதானமாக "போராட்ட முறை" பிரச்னையாக பார்க்கின்றனர்; நடைமுறையில் ஸ்தாபன பலஹீனத்தின் பேரால் நடைமுறையில் சும்மா இருக்கும் தந்திரத்தையே கையாளுகின்றனர். அவர்கள் சிந்தனை செய்யும் தன்மையும் அவர்களின் அடிப்படைக் கண்ணோட்டமும் ஒன்றே. ஆகவே, ஸ்தாபனத்தின் அவசியத்தைப்பற்றி அவர்கள் பேசியபோதிலும், ஸ்தூலமாக எதையும் செய்ய அவர்கள் தவறுகிறார்கள்.

இந்தப் போக்குகளையெல்லாம் எதிர்த்துப்போராடி களைந்தெறிய வேண்டும். "செய்யவேண்டியது என்ன?" ஒரு படி முன்னால், இரண்டு படிகள் பின்னால்" என்ற அழியாப் புகழ் பெற்ற புத்தகங்களில் லெனின் போதித்தவைகளை கட்சியின பாத்திரம், முக்கியத்துவம்பற்றி தோழர் ஸ்டாலின் போதித்துள்ளவைகளை கட்சி பூராவின் உணர்வின் பாகமாக ஆக்க வேண்டும். இதன் அடிப்படையில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சரித்திரத்தின் அடிப்படையில், தோழர்கள் மா-சே-துங், லியோ-ஷோ-சி எழுதியவற்றின் அடிப்படையில், சகோதரக் கட்சிகளின் தஸ்தாவேஜுகளின் அடிப்படையில், நமது இயக்கத்தின் படிப்பினைகளின் அடிப்படையில், நமது கட்சி முழுவதும் மீண்டும் பயிற்சி பெறுவதற்கும், கட்சியின் பாத்திரம், வேலை முறை, ஸ்தாபனம் பற்றிய பூர்ஷ்வா, குட்டிபூர்ஷ்வா கருத்துக்களை ஒழித்துக்கட்டுவ

தற்கும், அவற்றின் அடிப்படையில் வேலையின் முறைகளையும் போக்குகளையும் மாற்றிக்கொள்வதற்கும் நமது கட்சிக்குள் வேலை ஆரம்பிக்கப்படவேண்டும்.

இவையெல்லாம் மிகவும் துரிதமாக, பொலிட் பீரோவின் தீர்மானம் வற்புறுத்துவதுபோல வெகுஜன வேலையை தீவிரப் படுத்திக்கொண்டே, செய்யப்பட வேண்டும். உடனடி கோரிக்கைகளுக்கான போராட்டம் அதி முக்கியத்துவம் பெற்றுள்ளது; அது நமது வெகுஜன நடவடிக்கைகளின் மையமாக அமையவேண்டும்.

எல்லா கட்சி யூனிட்டுகளும் தங்களின் உடனடி கடமைகளைப் பற்றி விவாதிப்பதோடல்லாமல், சமாதான இயக்கம், ஆளும் வர்க்கங்களின் சூழ்ச்சிகள், மற்ற கட்சிகளின் போர் தந்திரங்கள், சுலோகன்கள், மொழி, மொழிவாரி மாகாணப் பிரச்னைகள், ஐக்கிய அணி பிரச்னை முதலிய பரந்த அரசியல் பிரச்னைகளையும் விவாதிக்கும்படி நாம் உத்திரவாதம் செய்ய வேண்டும். கட்சியின் எல்லா மட்டங்களிலும் ரிபோர்ட் செய்யும் வழக்கத்தை—கீழ் கமிட்டிகள் மேல்கமிட்டிகளுக்கும், மேல் கமிட்டிகள் கீழ் கமிட்டிகளுக்கும் ரிபோர்ட் செய்யும் வழக்கத்தை—மீண்டும் ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு கட்சி யூனிட்டும் தன் நடவடிக்கைகளை பரிசீலித்தல், ஒவ்வொரு தோழருக்கும் பொருத்தமான வேலை நிர்ணயித்தல், வேலையை மேற்பார்வையிடுவது, விமர்சனம் சுயவிமர்சனத்தின் மூலம் தன் வேலையை அபிவிருத்தி செய்வது—ஆகியவற்றை செய்யும்படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். வேலையில் இன்றுள்ள திட்டமின்மையை விட்டொழிக்கவேண்டும். கட்டுப்பாட்டின் தொழ தொழா தன்மைக்கும், கட்சி ஸ்தாபன முறைகள் பற்றிய அலட்சியத்திற்கும் முடிவு கட்டியாக வேண்டும்.

நமது பத்திரிகைகள் வெறும் பிரசாரகர்களாக மட்டும் இருக்கக்கூடாது; அவை மக்களை எதிர்நோக்கும் எல்லா பிரச்னைகளிலும், மர்க்ஸிஸ-லெனினிஸ போதத்தின் அடிப்படையில் வெகுஜனங்களுக்கு பயிற்சியும் அளிக்க வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் கட்சிக் கல்விக்காக பெரும் அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்; கல்வியானது எல்லா யூனிட்டுகளுக்கும் ஒரு கேந்திர கடமையாக்கப்பட வேண்டும்; இதற்கு அவசியமான பிரசுரங்கள் வெளிவர வேண்டும்,

ஊழியர்களை உயர்ந்த ஸ்தானங்களுக்கு உயர்த்துவது, ஊழியர்கள் எந்த வேலையை மிக திறமையாக செய்ய

முடியுமோ அவற்றிற்கு அதற்கேற்ற முறையில் ஊழியர்களை பொறுக்கியெடுத்தல், தனது அங்கத்தினர் ஒவ்வொருவரின் வேலைகளையும் ஒவ்வொரு யூனிட்டும மேற்பார்வையிடுவது, அவைகளின வேலையை அபிவிருத்தி செய்வது, அபிவிருத்தியடைவதற்கு லாயக்கற்றவர்கள் என்று நிரூபணமாகிறவர்கள் உயர்ந்த ஸ்தானத்திலிருந்தாலும், அவற்றிலிருந்து களை அகற்றுவது—என்ற ஒரு துணிவான கொள்கையை நாம் பின்பற்றவேண்டும்.

கட்சி முழுமையையும் அதன் எல்லா யூனிட்டுகளையும் நாம் இயங்கச் செய்யவேண்டும், இயங்க வைக்கப்பட முடியாதவர்களை அல்லது நிர்ணயிக்கப்பட்ட அன்றாட வேலைகளை செய்ய மறுப்பவர்களை அகற்றவேண்டும்.

மேலே சொல்லியவற்றிலிருந்து நமக்கு சாதனைகள் ஒன்றுமில்லை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. கட்சியின் சரித்திரம் வெகுஜன போராட்டங்களுக்கும் துணிவான தலைமை கொடுத்த, மிகுந்த கஷ்டங்களுக்கிடையே மாறாத தைரியம் நிறைந்த மக்கள் நலனுக்காக உறுதியாகப் போராடிய சரித்திரமாக இல்லாதிருந்தால், கட்சி இன்றுள்ள நிலையில் நமது தேசத்தில் ஒரு பெரும் சக்தியாக—இருந்திருக்கமுடியாது. அதன ஊழியர்கள் பல பிரதேசங்களில் வெகுஜனங்களின் மத்தியில் ஆழமாக வேரூன்றுமலிருந்திருந்தால், தன்னலமற்ற கடினமான வேலையினால் அவர்களின (மக்களின்) அன்பையும் போற்றுதலையும் பெற்றிருக்காவிட்டால், சர்க்காரின் மூர்த்தண்யமான தாக்குதலை எதிர்த்து கட்சி சமாளித்திருக்கமுடியாது; தன்னை அழிப்பதற்கு சர்க்கார் செய்த முயற்சியை முறியடித்திருக்க முடியாது. நமது கட்சிக்கு உள்ளதுபோன்ற ஊழியர்கள் தங்களுக்கு இருப்பதாக மற்ற எந்த கட்சியும் கூறிக்கொள்ளமுடியாது. நமது கட்டுப்பாடும், நமது ஸ்தாபனமும், வேலையில் நமக்குள்ள விசுவாசமும் மற்ற எந்த கட்சியும் கண்டு பொறாமைப்படக் கூடியவை.

நமது சொந்த தேசத்திலுள்ள பூர்ஷ்வா, குட்டி பூர்ஷ்வா கட்சிகளுடன் ஒப்பிட்டால் நமது கட்சி மேன்மையானதென்றபோதிலும், மகத்தான சோவியத் யூனியன், சீன கம்யூனிஸ்ட் கட்சிகளின் சாதனைகளோடு ஒப்பிட்டால் நமது கட்சியின் சாதனைகள் மிகக்குறைவு என்பதை, பிரான்ஸ், இத்தாலி கம்யூனிஸ்ட் கட்சிகள் சாதித்துள்ளவைகளோடு ஒப்பிட்டால் நமது சாதனைகள் மிகக் கொஞ்சமே என்பதை நாம் கவனிக்காமலிருக்கமுடியாது. இந்தியாவில் ஒரு பொருளாதார

அரசியல் நெருக்கடி வேகமாக வளர்ந்துவருகிறது என்பதையும் நம்மை இன்று எதிர்நோக்கும் கடமைகளும் பொறுப்புகளும் இதற்கு முன்பு இருந்ததைவிட அபரிமிதமானதும் சிக்கல் வாய்ந்தது என்பதையும், எதிர்காலத்தில் அவை இன்னும் ஏராளமானதாகவும் அதிகம் சிக்கல் வாய்ந்ததாக இருக்கும் என்பதை நாம் பார்க்காமலிருக்கக்கூடாது.

மத்திய கமிட்டியின் தேர்தல் பரிசீலனையில் வற்புறுத்தியது போல, சமீப காலத்தில் நாம் பெரும் அளவு முன்னேறியுள்ளபோதிலும், ஒரு தொழிலாளிவர்க்கக் கட்சிக்கு உறுதியான அடிப்படையாக விளங்கும் வர்க்கங்களான, தொழிலாளி வர்க்கம், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் மத்தியில் நமது நிலை இன்னும் அதிக பலஹீனம் வாய்ந்ததாக உள்ளது எனபதையும் தேசத்தின் பெரும் பகுதியில் ஒரு உறுதியான அடிதளத்தை நாம் இன்னமும் கட்டியாக வேண்டுமென்பதையும், நாம் ஒரு பெரும்சக்தியாக விளங்கும் மாகாணங்களில்கூட நமது செயலாற்றும் பலம் குறிப்பிட்ட சில ஜில்லாக்களில்தான் உள்ளது என்பதையும் நாம் கவனிக்காமலிருக்க முடியாது.

ஆகவே திருப்தி மனப்பான்மைக்கோ, வேலையில் அசிரத்தைக்கோ, நாம் சாதித்து விட்டோமென்று சும்மா இருப்பதற்கோ இடமில்லை. அதற்குமாறாக, முயற்சிகளும், வேலைகளும், எல்லா வழிகளிலும், எல்லா பிரதேசங்களிலும், எல்லா அரங்கங்களிலும் நூறுமடங்கு தீவிரப்படுத்தப்படவேண்டும். இதற்காக, கட்சி விமர்சனம், சுய விமர்சனம் என்ற நெருப்பில் எல்லாவித பலஹீனங்களும் களையப்பட்டு புனரமைக்கப்படவேண்டும்.

இதுதான் நம்முன் உள்ள கடமைகளை நிறைவேற்றுவதை சாத்தியமாக்கும்.

★

ஜனசக்தி பிரஸ், சென்னை—6.

